# புத்துணர்ச்சியின் எதிரொலியே


Phone No 4502 · Regd. No. M. 5458

தனி இலை அரை அணா · இலங்கை 5 சதம்

பேரா. கு. கோதண்டபாணி
" அறிவாலயம் "
[redacted] திருவள்ளுவர் குடியிருப்பு,
[redacted] கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (1–6–50) ※ வெளியீடு (2–6–50) [ இதழ் 267


## முத்தமிழ் மாநாடு

### வடமொழிக்கு வக்காலத்து வாங்குவோர் தமிழரின் துரோகிகளே

### புலவர்களின் ஆராய்ச்சி பகைவர்களை வீழ்த்தும் படைக்கலனாகட்டும்!

(0)

### ஏட்டைவிட நாட்டாராய்ச்சியிலேயே நாங்கள் ஈடுபட்டுள்ளோம்

### முத்தமிழ் மாநாட்டில் அண்ணாத்துரை சொற்பொழிவு

"கவிஞர் அவர்களே, பெருமக்களே! தோழர்களே! இரண்டு நாட்களாக முத்தமிழை அறிஞர்கள் இங்கு முழக்குவதைக் கண்டீர்கள். அத்துடன் கூட மாநாட்டில், ஐந்து அல்லது ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத் தீர்மானங்கள் இன்றைய சூழ்நிலையில் இன்றியமையாத கருத்துக்கள் நிறைந்தவை. இந்த மாநாடு இவ்வளவு சிறப்பாக நடந்ததானது தமிழன் எடுத்த முயற்சியை எவ்வளவு திறம்படச் செய்திருன் என்பதற்கு ஓர் சான்று.

இது இரண்டாவது மாநாடு. முதலில் கூடியவர்கள் நம்மையாள்கின்ற மந்திரிகள், ஆண்ட அமைச்சர்கள் ஆண்டு அலுத்துப்போனவர்கள், அவர்கள் கூடிய பின் நாம் கூடியுள்ளோம்.

**போட்டியல்ல!**

அவர்கள் நடத்திய தமிழ் வளர்ச்சி மாநாட்டுக்குப்பின், நாம் முத்தமிழ் மாநாடு கூட்டப்பட்டுள்ளதால் போட்டி மாநாடு என்று சிலருக்குச் சந்தேகம். அவ்வளவு பெரிய மனிதர்களுடன் நாம் ஏன் போட்டி போடப்போகிறோம்! அவர்கள் நடத்திய மாநாட்டில் நல்ல திட்டங்கள் தந்திருந்தால் அவர்களைப் பாராட்டவும், தவறி ஏதாவது செய்திருந்தால் கண்டிக்கவும் தான் நாம் மாநாடு கூட்டியுள்ளோம். நாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு போட்டி மாநாடு நடத்தமாட்டோம். வேண்டுமானால் அவர்கள் நடத்திய மாநாட்டை, எளிதில் எங்களுடைய மாநாடாக்கி இருப்போம்.

**நாமும் அவர்களும்**

தமிழ் நாட்டார் இன்று விழிப்புணர்ச்சிபெற்றுள்ளனர். அந்த விழிப்புணர்ச்சியை பயன்படுத்திக்கொள்ள, பல் வேறுவகையில் முயற்சி எடுத்துக்கொண்டால்தான் வெற்றி கிட்டும். எங்களால் முடிந்ததைச் செய்யவே இந்த மாநாடு. அதனால்தான் இது போட்டி மாநாடு அல்லவே அல்ல. தமிழுக்குத் தீங்கு செய்யும் படியானது எந்த மாநாட்டிலாவது நடந்ததா, இல்லை. அவர்களுக்கும் நமக்கும் அடிப்படையில் சில வேற்றுமைகள். அதை விளக்கத்தான் இம்மாநாடு. முத்தமிழ் மாநாட்டில் தமிழ் நாட்டில் தலைசிறந்த பேரறிவாளர்கள் கலந்துகொண்டு ஆற்றும் சொற்பொழிவுகளை நீங்களே கேட்டீர்கள். முதறிஞர் நாவலர் பாரதியார் உடல் நலிவையும் கருதாமல் வந்துள்ளார். அவருடைய வரவைப் பாராட்டுவதுடன், பெருமை கொள்கிறோம். மந்திரிகளும், மந்திரிப் பதவியிலிருந்து தள்ளப்பட்டோரும், மாஜி மந்திரிகளும் அவர்கள் மாநாட்டில் நம் மாநாட்டில் சோமசுந்தர பாரதியார். நான் சொல்லுகிறேன், நாவலர் பாரதியாரும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும், ஔவை துரைசாமிப் பிள்ளையும், வெள்ளைவாரணனாரும் நம் மாநாட்டில் கலந்துகொண்டார்கள் என்றால் இதுவா போட்டி மாநாடு? அல்ல, இது திருத்த மாநாடு. பாரதியாரைக் கேட்காமல் எங்கே தமிழ் வளர்க்க முடியும், மாஜி திவான்களாக தமிழ் வளர்ப்பவர்கள்? நிதி மந்திரிகள்தான், அரசியலை அலசியவர்கள்தான், ஏற்றுக் கொள்கிறேன். சமஸ்கிருதம் கற்றால்தான் தமிழ் வளரும் என்று கூறும் தமிழ் நாட்டு துரோகிகளே தவிர அவர்கள் வேறு அல்ல.

**காட்டிக்கொடுக்கிறார்**

ஔவை துரைசாமி பேச்சைக்கேட்டு, வெள்ளைவாரணனார் விளக்கத்தைக் கேட்டு பெருமையடைந்தேன். இரண்டாயிரம் அல்லது மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அண்டம், ஈர்ப்பு ஆகியவைகளின் தொடர்பு தமிழ் நூல்களில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளதென்று அறிவித்தார். பூரித்துப்போனேன் அவர் பேச்சைக் கேட்டு. கோவை சீமான், நிதி சீமான், மாஜி மந்திரி சண்முகத்திற்கு அது போதவில்லை, சமஸ்கிருதம் படித்தால்தான் தமிழ் முற்றுப் பெறும் என்று கூறுகிறார். எதைக்கொண்டு இவ்வாறு கூறமுடியும்? சமஸ்கிருத மாநாட்டில் சமஸ்கிருதம் கற்றால்தான் தமிழ் முற்றுப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## இந்து சட்டத்திருத்த மசோதாவைக் குறைகூறுவது முட்டாள்தனம்

### வரட்டுக்கூச்சல் போடுவது வைதிகத்தின் வழக்கமாகிவிட்டது

### காசி பல்கலைக் கழகப் பேராசிரியை தோழியர் தர்மாவின் கருத்துரைகள்

சென்னை, மே 31—

இந்து சட்டத் தொகுப்பு மசோதா, சட்டமாக நிறைவேறியபின், இந்து பெண்கள் விவாகரத்துக் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருப்பார் என்று நினைப்பது தவறு என்றும், அம்மாதிரி பயத்திற்கே அவசியமில்லை என்றும் காசி இந்து பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த புரபசர் டாக்டர் தோழியர் பி. ஸி. தர்மா கூறினார். இந்தியாவில், இலக்கிய டாக்டர் பட்டம் பெற்ற முதல் பெண் இவர்தான்.

இம்மசோதாவைக்கொண்டு வந்ததற்காக பண்டித நேருவையும், டாக்டர் அம்பேத்கருவையும் பாராட்டிவிட்டு அவர் கூறியதாவது:—

பெண்களுக்கு பொருளாதாரத் துறையிலும் சமத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமே. இந்துசமூகத்தில் இரண்டாவதுமுக்கியஸ்தானத்தைப் பெண்கள் இப்போது பெற்று வருகின்றனர்.

புனித இலக்கிய இதிகாசங்களிலிருந்து முன் காலத்தில் பெண்களுக்கு முதல்தர அந்தஸ்து அளிக்கப்பட்டு வந்ததென்பது தெளிவாகிறது. ஆனால், இன்று சமூகத்தை உருவாக்குவதில் அவளுக்கு பங்கு இல்லை.

பலதார மணம், விவாகரத்து மிராண்டித் தனமான வழக்கம்

சட்டம் ஏற்படுத்தி அமுல் செய்வதால் ஆண்களாகவே இருந்து வருகின்றனர். தாங்களாகவே ஏற்படுத்திக் கொண்ட இவ்வேலையை, ஆண்கள் சரிவரச் செய்யவில்லை என்பதை மகாத்மா காந்தியே ஒரு தடவை கூறியிருக்கிறார்.

எப்பொழுது இம்மாதிரி சமூகச்சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வரப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் 'மதத்திற்கு ஆபத்து' என்ற கூச்சல் எழுவது வழக்கமாகிவிட்டது. கணவனுடன் உடன்கட்டை ஏறும் 'சதி' வழக்கம் ஒழிக்கப்பட்டதினாலும், சாரதா சட்டம் அமுலுக்கு வந்ததினாலும் மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டதோ?

இந்தப் புது சட்டத்தை இந்தியாவிலுள்ள கற்றறிந்த பெண்கள் எல்லாருமே வரவேற்பர்

## சாம்பசிவம் சென்னை வருகிறார்

புதுடில்லி, மே 31—

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பிரிவி கௌன்சில் அப்பீலில் விடுதலையான மலேயா சாம்பசிவம், இன்று சப்பல் மூலம் சென்னைக்கு சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டுவிட்டார். வேலூரிலுள்ள தன்னுடைய மாமனுடன் வசிக்கப் போவதாக தோழர் சாம்பசிவம் முன்பே அறிவித்துள்ளார்.

பிரபல தொழிற்சங்கத் தலைவராக இருந்த தோழர் சாம்பசிவம் ஜொஹூர் உயர்நீதி மன்றத்தால், கையில் ரிவால்வருடன் திரிந்தாரென்று குற்றம் சாட்டித் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார்.

பிரிவு கௌன்சிலுக்கு மனுச் செய்துகொண்டு, குற்றத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டபின் மீண்டும் பாதுகாப்புச் சட்டங்களின்கீழ் தோழர் சாம்பசிவம் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்தியாவுக்குச் சென்றுவிட விரும்புவதாகத் தோழர் சாம்பசிவம் அறிவித்திருந்ததின்படி மலேயா சர்க்கார் அவருக்குச் சமீபத்தில் அனுமதியளித்துவிட்டது.

## அரசியல் தொடர்பில்லா அதிசய ராணுவம்!

### இந்திய ராணுவத்திற்கு 'கார்டியன்' சர்ட்டிபிகேட்

லண்டன், மே 31—

"இந்திய ராணுவம் மிகத் திறமையானது என்பதுடன் மட்டுமின்றி, அரசியல் தொடர்பற்றதுமாகும். அந்தத் திறமைக்கேற்ப மிகவும் திறமைவாய்ந்த தோழர் கரியப்பா அதன் சேனைபதியாக அமைந்திருப்பது விசேஷம் என்று 'மாஞ்செஸ்டர் கார்டியன்' தோழர் கரியப்பா லண்டன் விஜயத்தைக் குறித்து எழுதியுள்ள தலையங்கம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறது.

அது எழுதியிருப்பதாவது:—இந்தியாவில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தும், இந்திய ராணுவத்தில் மட்டும் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

நாடு பிரிவினையானபோது ஏற்பட்ட விபரீதமான நிலைமையைத் தோழர் கரியப்பா மிகத்திறமையாக சமாளித்திருக்கிறார்.

1947ல் அவர் கலகத்தை ஒடுக்க பாடுபட்டதை யாரும், இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

## மாலுமிகள் வேலை நிறுத்தம்

போனஸ்அயர்ஸ், மே 31—

தென் அமெரிக்கா வி... ... வொயனர்ஸ் அயர்ஸில் மே மூ... வாரத்திலிருந்து கப்பல் மாலுமிகள் ... த்திலுள்ள ஆர்ஜென்டைன் சிப்பந்திகள் வேலை நிறுத்தத்தின் விளைவாக ஏற்றுமதி இறக்குமதி யாவும் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

மாலை மணி

சென்னை 1—6—50 வியாழக்கிழமை

# முத்தமிழ் முழக்கம்

**கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு—கண்டறியாக் காட்சி, கொண்டறியாக் கோலம்!**

தமிழ் வழங்கும் நல்லுலகத்தின் கவனத்தையெல்லாம் பற்றிநின்ற கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு, சீரும் சிறப்பும் பெற்று, வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது!

முப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர், வெள்ளம்போல் கூடினர்; முத்தமிழின் முழங்கோசை கேட்டனர்; புதுமுறுக்குப் பெற்றனர்!

முத்தமிழ் கொடுத்த மூவகை விருந்துகளையும் பெற்றனர்; பேருவகை கொண்டனர்; உவகை, பார்க்கும் இடமெங்கும் நீக்கம் அற நிறைந்து நின்ற முகங்களிலெல்லாம் மகிழ்ச்சி வெள்ளமாக முகிழ்த்து நின்றது!

கோவை மாநாட்டிலே, முத்தமிழின் விரிந்த கூறுபாடுகளென விளங்கும் இயல், இசை, கூத்து ஆகிய மூன்றும் ஆற்றலைக் காட்டி, அறிவைப் பெருக்கி, உணர்ச்சியை ஊட்டி, எழுச்சியை தந்து, மகிழ்ச்சியைக் கொடுத்தன. அவற்றில்திளைத்தெழுந்த மக்கட்கூட்டம் 'எங்கள் வாழ்வும்எங்கள் வளமும் மங்காத தமிழ்' என்ற பேருணர்வைப் பெற்றுப்பெருமிதத்தோடுகாட்சியளித்தது!

தமிழ்—இயல் அரங்கத்தின் மூலமாகப் பேசிற்று; இசை அரங்கத்தின் மூலமாகப் பாடிற்று; கூத்து அரங்கத்தின் வாயிலாக நடித்தது! கண்ணுக்குக், காதுக்குக், கருத்துக்கு விருந்திடப்பட்டது அங்கே! கூத்து அரங்கம் கண்ணுக்கு விருந்தளித்தது; காதுக்குவிருந்தாக இருந்தது இசை அரங்கம்; கருத்துக்கு விருந்து, இயல் அரங்கம்! காட்சியைக் கண்டு, இசையைக் கேட்டு, கருத்துக்களை உண்டு, முத்தமிழின் இன்பம் நுகர்ந்தனர், முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிலே கூடினோர்.

மாநாடு பலவகையிலும் தனிச்சிறப்புடையதொரு தனிப்பெரும் மாநாடாக நடந்தேறிவிட்டது. மாநாடு கூட்டியோர் மகிழும் வகையிலும், தமிழ்ப் பகைவர் கண்டு மருளும் தன்மையிலும் மாநாடு வெற்றி மாலை சூடிவிட்டது.

இந்த மாநாடு நடைபெற்ற ஒரு வாரத்திற்கு முன்புதான், அதே கோவையில் தமிழ்த் திருவிழா வென்று ஒன்றினைக், கோமான்களும், சீமான்களும், பூமான்களும ஆகிய ஆளவந்தார்கள், ஆள ஆசைப்படுவோர்கள், ஆண்டு அலுப்படைந்தவர்கள் ஆகியோர் கூட்டினர். இந்த மாநாட்டையோ பாமர மக்கள் சார்பில், பொதுநோக்கை அடிப்படையாகக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூட்டினர். இரண்டையும் கோவை மக்கள் கண்டனர்—இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளைக் கண்டனர்; வேறுபாட்டைச் செயலாலும் உணர்த்தினர். தமிழுக்கு ஆக்கந்தேடி, ஊக்கந்தந்து, உறுதிபயக்கும், உண்மை நெறிப் பண்பினர் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டிலேதான் முனைந்து நிற்கின்றனர் என்பதை, மக்கள் வெள்ளம்போல் திரண்டு காட்டியதிலிருந்தே இனிது அறியலாம்.

"**தமிழ்த்திருவிழா**" தனிப்பட்டவர்களின் முயற்சி; "**முத்தமிழ் வளர்ச்சி மாநாடு**" மக்களின மாநாடு, என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தம் தலைமை உரையில் சுட்டிக் காட்டியதானது, உண்மை நிலையின் உயரிய விளக்கமாக இருந்தது.

முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டைக் கூட்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவரேயாயினும், அதன் நோக்கத்தைப் பொதுப்படையாகவே கொண்டனர். மேடையமைத்துத் தந்தனர்; அதனை முத்தமிழ் வளர்ச்சியிலே நாட்டங்கொண்ட அனைவர்க்கும் பொதுவாக்கினர்; அதன்மூலம் காத்துக்களைப்பறிமாறச்செய்தனர். மற்றக் கட்சியினரும், கட்சிப் பற்றில்லாதோரும் முத்தமிழ் வளர்ச்சிபற்றி என்ன கருதுகிறார்கள் என்பதைக் கேட்டறியவும், தாம் என்ன கருதுகிறோம் என்பதை அவர்கள்பால் தெரிவிக்கவும், ஒத்த கருத்துக்களின்பேரில் கூட்டு முயற்சியைக்கொள்ளவும் திராவிட முன்னேற்றக் கழகத்தார் தங்கள் சொந்தப் பொறுப்பில் மாநாடு கூட்டினர். அழைப்பினை ஏற்றுப் பல்வேறு திறத்தினரும் மாநாட்டிற்கு வந்திருந்ததும், பங்குஎடுத்துக் கொண்டு, பலவகையிலும் மாநாட்டினை வெற்றிபெறச்செய்ததும் அதுமாநாட்டிற்குத் தனிச் சிறப்பைத் தருவனவாகும்.

தமிழ் உலகில், எதிர்ப்பு எதற்கும் அஞ்சாச் சிங்கங்களெனத் தனி வீரநடைபோட்டு வெற்றி வலம்புரிந்து வரும் புரட்சிக்கவிஞரும், நாவலரும், வீரத்தோற்றத்தோடு மேடைமீது அமர்ந்திருந்த காட்சி, கண்கவர் தன்மையதாக இருந்தது. இருவரும் பேசினார்கள் என்று சொல்ல முடியாது, தத்தம் சிங்கக்குரலால் வீர முழக்கமிட்டுக் கருத்துக்களை வீசினர். இருவரது வீர மொழிகளைக் கேட்ட மக்கள், உணர்ச்சி வயப்பட்டுக் கிளர் உள்ளத்தோடு காணப்பட்டனர் முத்தமிழைக் காக்க வேண்டியதன் அவசியத்தையும், அதனைப் புரிந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தையும் நாவலர் பாரதியார் தெள்ளத் தெளியவிளக்கினர். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், முத்தமிழின் தன்மையையும், ஆற்றலையும் விளக்கி, அதனை வளர்க்க வேண்டிய வழிகள் பற்றி ஆய்வுரை கூறியது போற்றி வரவேற்கத்தக்கதாகும்.

தமிழ் அறிஞர்களும், ஆராய்ச்சியாளர்களும், பாவாணரும், புலவர்களும், மாணவர்களும் மாநாட்டில் பங்கு கொண்டு கடமையாற்ற ஒருவரை ஒருவர் முந்துற வந்து நின்று ஆர்வங்காட்டியது, தமிழ் வளர்ச்சிக்கு இது எவ்வளவு நல்ல வாய்ப்புடைய காலமாக இருக்கிறது என்பதை விளக்கிற்று.

புலவர்களான தோழர்கள் ஔவை சு. துரைசாமி, க. வெள்ளைவாரணம், இராம. மீனாட்சிசுந்தரம், கா. அப்பாத்துரை, சுந்தரராசன் ஆகியவர்களின் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிகளும், தோழர்கள் அ. பொன்னம்பறனார், அண்ணல்தங்கோ, அன்பழகன், நெடுஞ்செழியன், மதியழகன், டி. கே. சீனிவாசன், சி. பி சிற்றரசு, என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத், அரங்கண்ணல் ப. கண்ணன், தில்லைவில்லாளன்; முருகு சுப்பிரமணியம், காஞ்சி மணிமொழியார், காஞ்சி கல்யாணசுந்தரம், ஏ. சித்தையன், மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார் ஆகியோர் வீரமுழக்கங்களும் கேட்டோர்ப் பிணிக்கும் தகையன வாக விளங்கின. யாரும் குறிப்பெடுத்துப் பேசாமல், நீர் வீழ்ச்சி போன்று சொற்பொழிவாகவே நிகழ்த்தினர். இது பொதுமக்களுக்குப் பேரதிசயவுணர்வைக் கொடுக்கக்கூடியதாக இருந்தது.

இசையரங்குகளில் கலந்து கொண்ட நகைச்சுவையரசர் என். எஸ். கிருஷ்ணன், தோழர்கள் சி. எஸ். ஜெயராமன், டி. வி. நமசிவாயம், இராசமணிக்கபாகவதர் ஆகியோர் தமிழ் இன்னிசைமூலம் மக்களை நல்ல முறையில் மகிழ்வித்தனர்.

மாநாட்டில் பயிற்சி பெற்றத் தொண்டர்களாலும், போலீஸாராலுங்கூட சமாளிக்கமுடியாத அளவுக்குப்பெருங்கூட்டமாகவும், பந்தல் நிறைந்து வெளியேபிதுங்கும் கூட்டமாகவும் நாடகங்களைக் காண இரண்டு இரவுகளிலும்மக்கள் கூடிவிட்டனர் என்றால், நாடகங்கள் எத்துணையளவுமக்களை ஈர்க்கும் தன்மையதாக இருந்திருக்கவேண்டும் என்பதைக் காணாதார் ஊகித்தறிந்துகொள்ளலாம்.

மாநாட்டில் மிகமுக்கிய சிறப்புகளாக விளங்குவன, "முத்தமிழ்ப் பெருமன்றம்" நிறுவனம் ஆகியிருப்பதும், இந்தி நுழைவை எதிர்க்க நாட்டில் கூட்டு முன்னணி அமைக்கவேண்டும் என்ற தீர்மானமுமாகும். இவையிரண்டையும் வெற்றி பெறச்செய்வதே மாநாட்டில் மக்கள் காட்டிய ஆர்வத்திற்கும், நாட்டில் மக்கள் காட்டும் ஆதரவுக்கும் ஏற்ற அறிகுறியாகும் என்பதோடு, அதுதான் செய்ய வேண்டிய சிறந்த கடமையுமாகும்.

தமிழை அரித்துக்கொண்டிருக்கும்—அழித்துக்கொண்டிருக்கும் முயற்சிகளையெல்லாம் வேரோடு பெயர்த்தெடுத்து வெந்நீர்விட்டுப் பொசுக்க, மொழியால் தமிழர்களாகவும், வரலாற்றால் திராவிடர்களாகவும் விளங்கும் மக்கள் அனைவரும் முயலவேண்டும். அதற்கான தீர்மானங்களும், ஆக்கவேலைகள் புரிவதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அவற்றைச் செயலில் கொண்டுவர பொதுவாகத் தமிழ் மக்களும் குறிப்பாகத்திராவிட முன்னேற்றக்-கழகத்தாரும் முனைய வேண்டும்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தாரின் முதல் முயற்சி! அது வெற்றித் தந்துவிட்டது, நாடு கண்டறியாதவகையில், கேட்டறியாத முறையில்!

உண்மை உணர்ச்சிக்கும், உயரிய நோக்கத்திற்கும், உள்ளன்பான உழைப்புக்கும் மக்களின் ஆதரவு என்றென்றும் உண்டு, ஏராளமாக உண்டு என்பதை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு நன்கு உணர்த்திவிட்டது.

கோவையில் முத்தமிழ் முழக்கம் கேட்டோம், இனி எங்கும் முழங்கட்டும் முத்தமிழ்!

# காவற் கைதிகள் கொலைகாரர்களாய் மதிக்கப்படும் அநீதி

—(0)—

## ஒதுக்கப்பட்ட அறைகளில் அடைத்துவைப்பது கொடுமையாகும்

—(0)—

## சென்னை நீதிபதியின் கருத்து

"சாதாரண சிறைக் கைதியையாவது, பாதுகாப்புக் கைதியையாவது ஒதுக்கப்பட்ட அறைகளில் அடைத்து வைப்பது முறைபற்ற செயல். இதனால் பல கைதிகள் மனமே கெட்டுவிடக் கூடும். சிலருக்குச் சிந்தை தடுமாற்றம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும் சாதாரண அறைகள் எல்லாம் நிறைந்துவிட்ட போதிலும், தூக்கு தண்டனை விதிக்கப் பட்டவர்களை அடைத்து வைக்கும் அறைகளில், அவர்களை அடைத்து வைப்பது கொடுமையாகும் என்பதே எனது அபிப்பிராயம்"

"ஒதுக்கப்பட்ட அறையில் நான் அடைக்கப்பட்டிருக்கிறேன். இது அநீதியானது. எனவே, என்னை இச்சிறையிலிருந்து மாற்ற வேண்டும்" என்று, வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதியாக இருக்கும் தோழர் பொதுவால் என்பவர் விடுத்த விண்ணப்பத்தின்பேரில் சென்னை நீதிபதி ஸ. எஸ் பஞ்சாபிகேச அய்யர் தீர்ப்பின் சாரம்தான் மேலே தரப்பட்டிருப்பது.

காங்கிரஸ் ஆட்சியின் கண்மூடித்தனத்துக்கு இங்ஙனம் வேலூர் சிறையில் பாதுகாப்புக் கைதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமையேபோதுமான சான்று.

தூக்குமேடைக்கு அனுப்பப்படவிருக்கும் ஒரு குற்றவாளியும், காரணம் காட்டாமல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் கைதியும் ஒன்றாக மதிக்கப்படும் கொடுமையை இன்று காண்கிறோம். நல்லவேளையாக பாதுகாப்புக்கைதிகளைத் தூக்குமேடைக்கே அனுப்பிவிடாமல், அதற்கு முன்னிடமாகிய ஒதுக்கப்பட்ட சிறையில் வைக்கிறார்களே, அதுவரையில் ஆட்சி முறையை மெச்சவேண்டியதுதான்!

# அன்னியர் சுரண்டலை தவிர்க்க அதிக சுங்கவரி

மிலான், மே. 31—

நெருக்கடியான நிலைமையைச்சமாளிக்க இதாலி, அன்னியபொருட்கள் உள் நாட்டில் வரவொட்டாமல் தடுக்க சுங்க வரியை அதிகரித்திருக்கிறது.

அனேக பொருள்களின் மீது சுங்கவரியை அதிகரித்திருப்பதனால், இதாலிக்கும் இதர மேற்கு நாடுகளுக்கும் வியாபாரம் சற்றுத் தனிவடையும் என்று தெரியவருகிறது.

இதாலி சுங்க வரியை அதிகரித்திருப்பது "மார்ஷல் திட்டத்தின்" நோக்கத்திற்கு மாறானது என்று, இதாலி சர்க்காருக்கு, அமெரிக்க அதிகாரிகள் எச்சரிக்கை செய்திருக்கின்றனர். கட்டுப்பாடில்லா அன்னிய பொருள்களை இதாலிக்குள் அனுமதித்தால், நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் பூட்டப்படநேரிடும் என்றும், இப்பொழுது 2,500,000 வேலையில்லாதவர்களின் சங்கியை இரட்டிக்கும் என்றும் இதாலிய சர்க்காரின் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இறக்குமதி லைஸென்ஸ் பெறுவதற்கு அனேக உயர்ந்த இதாலி உத்யோகஸ்தர்கள் லஞ்சம் கொடுப்பதாக தகவல் சர்க்காருக்கு எட்டியுள்ளது.

இதாலியின் பிரதமர் டி காஸ் பரி, ஒரு அந்தரங்க விசாரணை நடத்த உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

இதற்கு இதாலியின் முக்கிய இறக்குமதியாளர்கள் சாட்சியம் கூறுவர்.

# அமெரிக்கருக்குப் போர் தந்த புதையல்!

*நியூயார்க், மே 31—*

*சென்ற யுத்தத்தில் ஜப்பானியர்களிடமிருந்து கைப்பற்றிய தங்கம், விலை உயர்ந்த மாணிக்கங்கள், முத்துக்கள் இவைகள் சில அமெரிக்கர்களிடமே இருப்பதாகவும், இவைகளைக்கொண்டு ஒரு ராஜ்யத்தையே வாங்கிவிடலாமென்றும், மாஜி யுத்த மந்திரி ராபர்ட் பேடர்ஸன் இன்று நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கூறினார்.*

*அமெரிக்க சர்க்கார் இதைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு ஸ்பெஷல் ஆராய்ச்சியாளரை நியமிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர்.*

*சென்ற யுத்தத்தில் நாஜிகளிடமிருந்து கைப்பற்றிய 30 கோடி டாலர் பெறுமான தங்கத்தை 16 நாடுகள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டார்களாம். —ருனேப்*

# காஞ்சி பச்சையப்பன் கல்லூரி

## திறந்து வைக்கப்பட்டது

காஞ்சீபுரம், மே 29—

காஞ்சியில் புதிய பச்சையப்பன் கல்லூரி நேற்று தோழர் எம். வேதாசல முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

பச்சையப்பன் நிதிபோர்டு தலைவர் டாக்டர் டி. சடகோபன் தோழர்கள் டி. எஸ். நடராஜபிள்ளை, எம். வி. வேணுகோபால்பிள்ளை, கெ. வெங்கடசாமிநாயுடு ஆகியவர்கள் திறப்புவிழாவின்போது சொற்பொழிவாற்றினர்.

கல்லூரி படிப்பு ஜூன் 21-ந் தேதி 100 மாணவர்களுடன் ஆரம்பமாகும். இவ்வாண்டு முதல் வருட இன்டர்மீடியட் வகுப்புகள் மட்டும் நடக்கும்.

# திராவிடமும் தமிழும் கனிச்சாறும் கரும்பின்சாறும் போன்றதே

(0)

## ஆடுகின்ற கூத்திலும், பாடுகின்ற பாட்டிலும் சீர்கெட்ட சிந்தனைகள் ஒழிய வேண்டும்

(0)

## அருந்தமிழ் காக்க அறப்போர் தொடுப்போம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் என்றுபேசியிருந்தால் 'மகாமகோபாத்யாயா' பட்டமாவது கிடைத்திருக்கும்! நம்மை எதிரிகளிடம் காட்டிக் கொடுக்கும் செயல் இதைவிட வேறு என்ன இருக்கமுடியும்?

**தமிழ் நாட்டை அறிந்தோர் எத்தனைபேர்?**

தமிழ் நாட்டில் பிறந்த எத்தனை பேருக்கு அகநானூறு தெரியும்? எத்தனை பேருக்குப் புறநானூறு தெரியும்? பதிற்றுப்பத்தை அறிந்தவர்கள் எத்தனைப்பேர்? தமிழ் நாட்டில் எத்தனை ஆறுகள் ஓடுகின்றன? எங்கே உற்பத்தியாகி எங்கு கடலில் கலக்கின்றன வென்பதைக்கூறும் பூகோளம் தெரிந்தவர்கள் எத்தனை பேர்? இந்த நாட்டு அரசியலை நிர்ணயித்தவர்கள் யார்? எத்தகையது அரசியல் என்று தெரியுமா தமிழ்நாட்டு மக்களுக்கு? தமிழ்நாட்டு இலக்கிய இலக்கண நூல்களையெல்லாம்படித்துவிட்டுஅறிவுக்கு போதவில்லையே என்று மக்கள் ஆயாசப்படுவதுபோலவும், போதாதற்கு சமஸ்கிருதம் படியுங்களென்று மாஜி திவான் கூறுகிறார். மதி நுட்பத்தால் ஏதோ புது உண்மையைக் கண்டுபிடித்துக் கூறுவதுபோல் பேசினார். நாங்கள் தமிழறிந்த பேறறிஞர்களின் கருத்துக்களை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக மாநாடு கூட்டினால், போட்டி மாநாடென்று கூறுவதா? தோழர் சண்முகத்துக்கு சமஸ்கிருதம் தெரியாது; தூரத்தில் இருப்பதால் பச்சையாகத் தோன்றுகிறது அவருடைய கண்ணுக்கு. படித்தால் பரிபூரணம் அடையுமா என்ற ஐயம் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் தான் ஏதோ சொல்லிவைப்போம் என்று கூறுகிறார்.

**தமிழ் போதும்**

தமிழனுக்குத் தமிழ் இருக்கும்போது மாறுபட்ட சுவடி தேவை இல்லை. தமிழ்ப் படித்தவர்களுக்கு, தமிழ் இனத்தில் தோன்றியவர்களுக்கு, தமிழைத் துருவிப் பார்க்க நேரமில்லை, மாசு போக்கத் இடமில்லை. இதுதான் குறை. இக்குறைபோக்கப்படுவதற்குப் பதில் சமஸ்கிருதம் படிக்க வேண்டுமென்று கூறித் தமிழினத்துக்குத் துரோகம் செய்கின்றனர். தமிழனுக்குத் தமிழ் போதும், நேர்மைத்திறன் இருந்தால் தமிழ் போதும், உள்ளத்தில் உறுதி இருக்குமானால் தமிழ் போதும், தமிழைக் கொண்டு தானே சிலப்பதிகாரம் ஆர்த்தான், சீவக சிந்தாமணியைக் கோர்த்தான், பத்து பாட்டை ஆக்கினான், குறளைத் தந்தான்; நாலு சாஸ்திரம், ஆறு கலை ஞானம்; என்னவென்று மக்களுக்குப் புரியவில்லையே! அதனால்தான் வேதங்களை ஒரு சிலர்தான் படிக்கவேண்டுமென்று திறமையுடன் கூறிவைத்தார்கள். உண்மை அறிந்தால் மக்கள் ஒதுக்கிவிடுவார்களென்ற பயம் அவர்களுக்கு! கே. எஸ். ராமசாமிசாஸ்திரியும், டி. ஆர். வெங்கட் ராமசாஸ்திரியும் சமஸ்கிருதம் ஏன், படிப்போமோ விட்டுவிடுவோமோ என்ற ஐயப்பாடு அடைந்துள்ள இந்த நேரத்தில்; சமஸ்கிருதம் வேண்டுமென்று தமிழ்வளர்ச்சிக் கழக மாநாட்டில் பேசினால்; அது தமிழ் வளர்ச்சிக் கழக மாநாடு ஆகுமா? முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் நாவலர் பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எடுத்துக்காட்டினார்கள்; தமிழுக்கு ஆக்கந்தேட வேண்டிய முறையை. நீங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கவேண்டும்.

**பாகிஸ்தான் திராவிடம்**

"திராவிடம்" என்ற சொல் பிடிக்கவில்லையென்று ஒரு சில தோழர்கள் கூறுகின்றனர். மற்றும் தமிழ்க்கொடி, முத்தமிழ் மாநாட்டுப் பந்தலில் ஏற்றுவிக்கப்படவில்லையென்றும் கூறப்பட்டது. இதனால் தமிழ்க்கொடியை நாங்கள் தாழ்த்தினோம் என்பது அல்ல. தாலமுத்து நடராசன் பிணங்களுக்குமுன் தமிழ்க்கொடியைத் தோளில் ஏந்தி நடந்தவர்கள் நாங்கள்தான், நம்மிடையே உள்ள சிறு வேற்றுமைகளை அதிகப்படுத்திக் காட்டுவது ஒற்றுமையைச் சீர்குலைப்பதாகும்.

பாகிஸ்தான் என்ற வார்த்தை குரானில் இல்லை. நபி நாயகம் கூறவில்லை; மெக்காவிலிருந்து மெதினாவுக்கு நபிநாயகம் ஓடியபோது சிந்தித்துப் பார்த்த வார்த்தையல்ல. வேண்டுமானால் இஸ்லாமிஸ்தான் என்றழைத்திருக்கலாம். முஸ்லீம்ஸ்தான் என்று மொழிந்திருக்கலாம். இல்லை ஜின்னஸ்தான் என்றே பெயரிட்டிருக்கலாம். பாகிஸ்தான் உருது வார்த்தையா, நபிகள் நாயகம் கூறியுள்ளாரா என்றெல்லாம்பார்க்கவில்லை. மறைந்த மாவீரர் ஜின்னா கண்ட புதிய வார்த்தை, அந்த வார்த்தை இன்று அகராதியில் அழியாத இடம் பெற்றுவிட்டது. அதேபோன்றுதான் திராவிடம் ஒரு இலட்சிய வார்த்தை. தலைவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன, ஆதரவு தந்தால் 'திராவிடத்தை வரலாற்றில் பதிக்கிறேன்.' ('திராவிடம்' என்ற வார்த்தை தமிழ்வார்த்தையா, இல்லையா என்பதற்குத் தோழர் அண்ணாதுரை பதிலளித்துக்கொண்டிருக்கையில் மேடையில் தலைவருக்குப் பின்னால் அமர்ந்திருந்த நாவலர் பாரதியார், 'தாயுமானவர் கூடத் திராவிடம் என்ற சொல் உபயோகித்திருக்கிறார்; அது தமிழ் வார்த்தைதானென்று கூறினார்.)

**வாளாக இருக்கட்டும்**

ஏட்டைவிட நாட்டையே நாங்கள் பெரிதும் ஆராய்கிறோம். நீங்கள் வீட்டிலிருந்து ஏட்டை ஆராயுங்கள். உங்கள் ஆராய்ச்சி எங்களுக்குப் பகைவர்களை வெட்டி வீழ்த்தும் வாளாக இருக்கட்டும்; வேல்களாக இருக்கட்டும். ஆனால் தடையாக இருக்க வேண்டாம். உறுதியைச் சின்னாபின்னமாக்க வேண்டாம்.

**திராவிடம் புதிதல்ல?**

டாக்டர் நடேசன் சென்னையில் திராவிட சங்கம் ஆரம்பித்தார். நாங்கள் அப்பெயரை மாற்றவில்லை. மேலும் அரசியலில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு 'திராவிடம்' என்ற சொல் அனுகூலமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் எங்கும் பரவியுள்ளனர். தமிழர் என்று முறுக்கேற்றினால், தமிழரின் விரோதிகள் பலம்பெற்று விடுவார்கள். 'தமிழாட்சி நிறுவுவதால் உனக்கேற்படும் லாபம் என்ன? ஆதரிக்காதே, என்று தெலுங்கர்களை ஏவுவார்கள். கேரளக்காரனைக் கிளப்பிவிடுவர், கன்னடக்காரனைக் கிளப்பிவிடுவார்கள். இதிலிருந்து தப்ப தமிழ் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு வார்த்தைக்காக திண்டாடினோம். 'திராவிடம்' கிடைத்தது. அந்த வார்த்தை நமக்குப் புதிதல்ல; நம் தலைவர்கள் உபயோகித்து வந்த வார்த்தை, 'திராவிடன்' என்று அந்தக் காலத்திலேயே பத்திரிகை நடத்தி வந்தார்கள். 'திராவிட வீரன்' திராவிட ரத்தினம்' என்ற பட்டங்கள் வழங்கி வந்தனர். தமிழுக்கும், திராவிடத்துக்கும் நமக்குத் தெரியும் வித்தியாசம் மாம்பழச் சாற்றுக்கும், கரும்புச் சாற்றுக்கும் உள்ள வித்தியாசம்தான். பேராசிரியர் சுந்தரம்பிள்ளைகூட 'திராவிடம்' என்ற சொல்லை அழகுபட உபயோகித்திருக்கிறார். அச்சிறு வித்தியாசம் நம்மைப் பிரிக்கவேண்டாம்.

"இலக்கிய மாமன்றம்" என்றமைக்க வேண்டுமென்று புரட்சிக் கவிஞர் எண்ணம் கொண்டிருந்தார்; 'இலக்கியம்' என்ற சொல் வடமொழியாக இருக்கலாம் என்று நாவலர் பாரதியார் கூறியதையொட்டி, முத்தமிழ் மாமன்றம் என்று மாற்றிப் பெயரிட்டழைக்கப் பாரதிதாசன் முடிவு செய்துள்ளார். உங்களுக்குத் தெரியும் கவிஞர் பாரதிதாசன் குணம். யார் கூறினாலும் தமமுடைய கருத்தைப் பாரதிதாசன் மாற்றிக்கொண்டிருக்கமாட்டார். அவரே இன்று இவ்வாறு செய்துள்ளாரென்றால், அது வியக்கத்தக்கதல்லவா?

இரண்டுகைகளையும் நீட்டிக்கொண்டு வருகிறோம், நண்பரை நாடி. சிறு வித்தியாசங்களை மறந்து, தமிழுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர்ந்து நாம் ஒன்று திரள முனைய வேண்டும். திராவிட முன்னேற்றக்கழகம்நடத்துவதால், அவர்கள் சொற்களைப்பரப்பத்தான் முத்தமிழ் மாநாடு நடத்துகிறார்களென்று சிலர் பயப்படுகிறார்கள். தி. மு. க. முத்தமிழ் மாநாட்டைநடத்துகிறதே தவிர கொள்கையைப் பரப்புவதற்குப் பயன்படுத்திக்கொள்ள அல்ல. இந்த மேடையில் தி. மு. க. எத்தகைய கொள்கைகளைக்கொண்டுள்ளதென்பதைத் தெரிவிக்கிறது. அதே போன்றுதான், பிறர் கருத்துகளை எடுத்துக்கூறுவதை வரவேற்கிறது. குறை இருந்தால் நிறை செய்யலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வேறு பெயரில் மறைந்து திரிபவர்கள் அல்ல. அவர்களுக்கு விராடபர்வம் பிடிக்கவே பிடிக்காது. சமீபத்தில்தான் கோவை தி. மு. கழக மாநாடு கணியூரில் நடத்தினோம்.

**இளைஞர்கள்பேராபத்தானவர்கள்!**

முத்தமிழை அறிந்துகொள்ள நாவலர் பாரதியாரை அழைத்தோம். அவர் அரசியலில்சேருவாரா, எங்கள் கழகக் கோட்பாடுகளை ஒப்புக்கொள்ள வேண்டுமா என்பதல்ல கேள்வி. ஔவை துரைசாமிப்பிள்ளையை அழைத்தோம். அவர் தோற்றமே உங்களுக்குக் காட்டிற்று அவர் தி. மு. கழகத்தினர் அல்லவென்பதை. எங்கள் கருத்தை அவர்கள் அறிந்துகொள்ளவும், அவர்கள் கருத்தை நாங்கள் தெரிந்துகொள்ளவுந்தான் அவர்களை நாங்கள் அழைத்தது.

காலையிலிருந்து 'தம்பிகள்' பேசினார்கள். கேட்ட சிலர் மருண்டனர், சிலர் வியந்தனர். அணுகுண்டுகளாகவும்ஹைட்ரஜன்குண்டுகளாகவும்வெடித்தனர் பேச்சில்; ஔவை துரைசாமிப்பிள்ளை கூடக் கேட்டுப் பூரிப்படைந்துவிட்டார். நாவலர் பாரதியாரும், புரட்சிக்கவிஞரும் பழமைக்குப் பழைய காலத்திலேயே ஏற்பட்ட ஆபத்து; ஆனால் இன்று தோன்றியுள்ள இளைஞர்கள் பேராபத்தானவர்கள் அவர்களுடைய ஆர்வத்தை நீங்களே நேரில் கண்டீர்கள்.

**செடுகல்கள் ஒழியவேண்டும்!**

நாவலர் பாரதியார் அறிவு ஆராய்ச்சி செய்தபோது அவருக்குப் பக்கபலமாக யாருமில்லை, பழமைச் சூழ் நிலையில் சிக்கிச் சாதிக்க முயன்றவர் பாரதியார். அவர் வளர்த்த பயிரைத்தின்று இருப்பவர்கள் நாம்.

'தமிழன் தாழாமல்' தாழ்த்தாமல் வாழவேண்டும்; சுரண்டாமல் — சுரண்டப்படாமல், வீரத்துடன், ஆனால் வெறி பிடிக்காமல் வாழவேண்டும் என்றுதான் தமிழ் நூல்கள் கூறுகின்றன; சிலாக்கியமான நூல்கள் பலருக்குத் தெரியாது தமிழ்நாட்டில். சந்தேகமிருந்தால் தெருவில் நின்று கொண்டு செல்லும் மக்களை, பத்துப்பாட்டு தெரியுமா, எட்டுத் தொகை தெரியுமா என்று கேளுங்கள்? நூற்றுக்கு ஒருவருக்குக்கூடத் தெரிந்திருக்காது. பாரதம், ராமாயணம் என்பவை எத்தனை பேருக்குதெரியும் என்றுபார்த்தால் நூற்றுக்கு 99 பேருக்குத் தெரிந்திருக்கும். சூழ்நிலைமாற வேண்டுமானால், இடைக்காலச் செருகல்கள் ஒழிய வேண்டும். அதற்கான வீரம் நமக்கு இந்த இரண்டு நாட்களாகக் கிடைத்துள்ளது.

**தயாராக இருக்கிறேன்!**

கடைசியில் பேசியவர்கள் இந்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தியை அவ்வளவு எளிதாகத் தமிழ்நாட்டில் விட்டுவிட மாட்டோம். நாவலர் பாரதியார் நலிந்திருந்தாலும், நம் போர்ப் பாசறையில் அவர் தான் இருந்தாக வேண்டும். நம்மை அணிவகுக்க, ஆயுதங்களின் கூர்மையைப் பரிசோதிக்க வேண்டியவர் பாரதியார் தான். சர்க்காரைத் தாக்கிப் பேசும்போது சொன்னார், சிறைக்குப் போகவும் தயார் என்று. முத்தமிழின் சார்பில் கேட்டுக்கொள்ளுகிறேன், ஆறு மாதங்களில் சிறைக்குச் சென்றால் நாங்கள் பெரும் பூரிப்படைவோம். பாரதியார் இதுவரை தனித்துழைத்துப் பெறாத வெற்றியை எளிதில் பெறலாம். மாநாட்டில் மந்திரி வேலை தருவோமென்று உறுதி கூறுவார்கள்; ஆனால் நான் அவரைச் சிறைச்சாலைக்குச் செல்லும்படி அழைக்கிறேன். நாவலர்பாரதியாரும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் அறப்போர்தொடுக்க வேண்டும்; ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் எங்கள் கட்சிச் சார்பில் சிறைக்கூடம் அனுப்பத் தயாராக இருக்கிறேன்.

**முத்தமிழ் மாமன்றம்**

தடை செய்யப்பட்ட நூல்களைப் பற்றி நான் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இந்த நடவடிக்கையை விரைவில் செயலளவில் கொண்டு வரப்போகிறோம். தலைவர்கள் வழிகாட்டவேண்டும். வளருகின்ற முத்தமிழுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைப்போக்க வேண்டுமென்று தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். பேசுகின்ற பேச்சிலும், ஆடுகின்ற கூத்திலும் சீர்கெட்ட சிந்தனைகள் ஒழியவேண்டும். அடிப்படை நிலைய முத்தமிழ் கூறுகிறது. புதிதாக வளரும் இலக்கியம், தோற்றுவிக்கப்பட்டுள்ள முத்தமிழ் மாமன்றம், தமிழனுக்கு வாழ்வைத் தேடிக்கொடுக்கும். அதற்குப் போதிய உறுதி தந்துள்ளது இம்மாநாடு.

இரண்டு நாட்களாகப் பெற்ற ஆர்வத்தை விடாமல், முத்தமிழ் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தலைவர்கள் தீட்டித் தர, அவைகளை நடைமுறையில் கொண்டுவர நான் தூதனாக உங்களிடம் வரும் போது, சிறைக்கூடம் புகத் தயாராகுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்."

# ‘முதலில் விஷயத்தை விளக்குங்கள்; பின்னர் பேசலாம்’

## ட்ரூமனுடன் பேச தோழர் ஸ்டாலின் நிபந்தனை

வாஷிங்டன், மே 31—

பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லியையும், யுனைடெட்ஸ்டேட்ஸ் ஜனாதிபதி ட்ரூமன் இவர்களைச் சந்தித்துப் பேசத் தயார்தான் என்றும், ஆனால் பேச வேண்டிய விஷயங்கள் முதலில் தெளிவாக்கப்பட்டு, அதுவிஷயமாகப் பேச இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்கிற மார்ஷல் ஸ்டாலின் யோசனையை ஐ. நா காரியதரிசி ஜெனரல் தோழர் டிரிவில்லே தன்னுடன் கொண்டு வந்திருப்பதாகத் தெரியவருகிறது என்று ‘குளோப்’ நிருபர் கூறுகிறார்.

இந்தச் செய்திபற்றி வாஷிங்டன் வட்டாரங்களில் நம்பிக்கை எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

## கம்யூனிஸ்டு படையெடுப்புக்கு முஸ்தீபு

லண்டன், மே 30—

மலேயாவில் இப்பொழுது ஏற்பட்டுள்ள சமஸ்தான இளைசம் கம்யூனிஸ்டு படையெடுப்புக்கு பூர்வாங்க முஸ்தீபாகும் என்று மலேயா பெடரேஷனில் மாஜி பிரதம சர்க்கார் காரியதரிசியாக இருந்த சர் ஜியார்ஜ மாக்ஸ்வெல் எச்சரித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டு கொரில்லாப்படையினர் ரஷ்யாவில் பயிற்சிபெற்ற சீன அதிகாரிகள் தலைமையில் இருந்து வருகின்றனர். நிலைமை மிகவும் முற்றிவிட்டது என்பதை அந்த சர்க்காரே ஒப்புக்கொள்கிறதென்பதையும் அவர் எடுத்துக்கூறியிருக்கிறார்.

## டூரிஸ்டுகளுக்குப் பரிசு!

### லெபனன் யுக்தி

பீரட், மே 30—

டூரிஸ்டுகளை அதிகமாக வரத் தூண்டச் செய்ய லெபனன் சர்க்கார் பல யுக்திகளைக் கையாண்டு வருகிறது. இரண்டு மாதங்களுக்கு மேல் தங்கியுள்ள விசிட்டர்களுக்கு ரொக்கப் பரிசு தர ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

லெபனனிலுள்ள கவர்ச்சிகரமான இடங்கள் பற்றி ரேடியோவில் வர்ணிக்கப்படுமாம். லெபனன் பத்திரிகைகளில் இது சம்பந்தமான விசேஷக் கட்டுரைகள் பிரசுரமாகுமாம். லெபனன் முக்கிய வருமானம் இதில்தான் இருக்கிறதாம்.

## கணவனைத் தூக்கி எறிந்த மனைவி

நியூயார்க், மே 31—

மிஸஸ் அனு போர்ன் ஹோல்ட் என்கிற 58 வயது பெண், தன் கணவனைப் படுக்கை அறையிலிருந்து தூக்கிக்கொண்டு வந்து வீதியில் எறிந்தாளாம். அம்மாதிரி செய்யவேண்டியிருந்தது என்று மட்டும் சொன்னாளே ஒழிய, ஏன் அப்படிச் செய்தாள் என்பதை அவளால் சொல்ல முடியவில்லை. அந்தப் பெண் ஒருவேளை பைத்தியமோ என்று பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

## அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளுடன் ஸ்வீடன் ஒத்துழைப்பு

லண்டன், மே 31—

[illegible] ஸ்டாக்ஹோமில் நடைபெற இருக்கும் [illegible] பிரிட்டன் டென்மார்க் நார்வே சம்பந்தப்பட்ட ஒத்துழைப்பை விரும்புகிறது.

ஸ்வீடன் ‘நடுநிலைமை’ கொள்கையுடன் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளுடன் சேர்ந்து செயல்படும்.

## பெர்னார்ட்ஷா வீட்டில் கல்வெட்டு அமைக்கப்படும்

லண்டன், மே 31—

ஒரு பெரியார் இறந்த பின் 25 ஆண்டுகள் கழிந்தால்தான் அவர் வசித்த வீட்டில் ஞாபகச் சின்னம் கல்வெட்டு அமைக்க வேண்டும் என்கிற லண்டன் கௌண்டி கௌன்சில் உத்தரவு பெர்னார்ட்ஷா விஷயத்தில் விலக்கப்பட்டிருக்கிறது.

பெர்னார்ட்ஷா அன்பு ஒரு காலம் வசித்த அடெல்பி என்ற இடத்தில், ஷாவின் ஞாபகார்த்தக் கல்வெட்டு ஒன்றை ஏற்படுத்த கௌன்சில் உத்தேசித்திருக்கிறது.

இதேமாதிரி நினைவுச்சின்னம் இந்திய தேசபக்தரான மகாத்மா காந்திக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## ராணுவத்தினருக்கு நிலமான்யம்

புதுடில்லி, மே 31—

கூட்டுப்பண்ணை முறையில் விவசாயம் நடத்த வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் டில்லியிலுள்ள 690 ஏக்கர் நிலங்களை முன்னாள் ராணுவத்தினருக்கு மான்யம் அளிப்பதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். முன்னாள் ராணுவத்தினருக்கான கூட்டுறவு சங்கம் மூலமே இந்நிலம் அளிக்கப்படும்.

## டெலிவிஷனை கண்டு மிரளுகிறார் ஒரு இந்தியர்!

லண்டன், மே 31—

டெலிவிஷனால் குடும்ப வாழ்க்கையின் குஷியே கெட்டு விடுகிறதென்றும், இதை சமூக விரோதி என்றே அழைக்கலாம் என்றும் லண்டனில் வசிக்கும் ஒரு பிரபல இந்திய அதிகாரி ‘குளோப்’ நிருபரிடம் கூறினார்.

இவர் இப்பொழுதுதான் ஒரு டெலிவிஷன்செட் வாங்கியிருக்கிறார்.

அவர் மேலும் கூறுவதாவது:— டெலிவிஷன் என் வீட்டில் வேலை செய்யும்போது யாரும் ஒருவருடன் ஒருவர் பேசுவதில்லை. மணிக்கணக்காக எல்லோரும் மௌனச்சாமிகளாக டெலிவிஷனைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருக்கிறார்கள். இதைக் குஷியான குடும்பவாழ்க்கை என்று கூறமுடியுமா?

டெலிவிஷன் விஷயத்தில் இப்பொழுது அதிகமோகம் இருந்து வருகிறது வாஸ்தவமே. அதில் பார்க்கவும் கேட்டு அறிந்து கொள்ளவும் எவ்வளவோ இருக்கிறது. ஆனால் மாலைவேளையில் குடும்ப சம்பாஷணைக்கோ, அல்லது ஒரு விஷயம் மட்டும் கேட்டுத்தான் டெலிவிஷன் எப்படி இவருக்குப் பிடிக்கவில்லையோ, அதேபோல் சினிமாக்காரர்கள், நாடகக் கம்பெனிக்காரர்கள், ஸ்போர்ட் விளையாட்டுகளை ஏற்பாடு செய்பவர்கள் ஆகியோர் இதனால் தங்கள் தொழில் வருமானம் பாதிக்கப்படுகிறதே என்று டெலிவிஷனை வெறுக்கிறார்கள்.

அம்மான், மே 31—

அமெரிக்க மாணவர்களின் ஒரு தூதுக்குழு ஜார்டன் ராஜ்யத்திலுள்ள சரித்திர சம்பந்தமான இடங்களையும், ஜார்டன் அரசாங்க போர்க்களங்களையும் பார்வையிடும் பூர்வமாக ஜார்டன் சர்க்காருக்கு வாஷிங்டன் அறிவித்துள்ளது.

## வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. மு. மாநாடு

### வரவேற்புக் குழுக் கூட்டம்

3—6—50 சனிக்கிழமை பகல் ஒரு மணிக்கு ஆரணி கணேசர் ரேடியோ நிலயத்தில் வரவேற்புக் குழுக் கூட்டம் நடைபெறும்.

அது சமயம் மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் முதலியவர்களைத் தேர்ந்தெடுத்தலும், மாநாட்டு வேலைகளை கவனிக்க பல உட்குழுக்களை ஏற்படுத்துவதும், செயலாளர்களால் கொண்டுவரும் இதர தீர்மானங்களைக் கவனித்தலும் நடைபெறும்.

வரவேற்புக்குழுஉறுப்பினர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள் என்றும் ஆரணி தி. மு. கழக உறுப்பினர்களும் நமது இயக்க தோழர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் மாநாட்டுச்செயலாளர்தோழர் பொ. பாலகிருட்டிணன் கேட்டுக்கொள்ளுகிறார்.

## மனோன்மணி சுந்தரனார் மன்றம்

### கட்டிட திறப்பு விழா

நாகர்கோவில், மே 26—

இன்று மாலை 5-30 மணிக்கு வடசேரி மனோன்மணி சுந்தரனார் மன்றத்தின் புதுக்கட்டிடத் திறப்பு விழா [illegible] தோழர் கே. குண்டலகேசம்பர் அவர்கள் பார்ட்டியின் இன்னிசை கச்சேரியுடன் துவங்கியது. தமிழ்வாணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள் கட்டிடத் திறப்புவிழாவை நிகழ்த்தினார்கள். அவ்வமயம் அழகப்பா கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் தோழர் ஆ. முத்துசிவம் எம். ஏ. அவர்கள் தலைமைதாங்க இசைக் கவிமணி கலைமாமணி தோழர் டி. இலக்குமண பிள்ளை அவர்கள் பேராசிரியர் சுந்தரனார் படத்தை திறந்துவைத்தார். ‘திராவிடம்—மனோன்மணீயம்’ என்ற தலைப்பில் நீதிபதி தோழர் ச. அருள்லிங்கம் எம். ஏ. வித்துவான் இ. பண்டாரசம்பியார், செ. சதாசிவம், தோழர் செ. தேவி (எம். எஸ்ஸி) மாணவி வித்துவான் தோழர் செ. வேலாயுதம்பிள்ளை, ம. அருணாசலம் பி. ஓ. எல். முதலானோர்கள் முறையே 1. இது ஒப்பற்ற நாடகம். 2. கவிஞர் சுந்தரனார். 3. பாத்திர அமைப்பு. 4. மனோன்மணீயத்தில் பெண்கள். 5 [illegible] 6. [illegible] மனோன்மணீயம் எனும் பொருள் பற்றி பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் ஐ. சுப்பிரமணியம் எம். ஏ. அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது. பின்னர் மன்றத்திற்கு வந்திருந்தோரைக்கொண்டு வைத்து புகைப்படம் ஒன்று எடுக்கப்பெற்றது.

## திருக்குறள் பிரசாரம்

வலாஜா தாலுக்கா திருக்குறள் பிரச்சாரக் குழுவினரான புலவர் ஆ. மணிஎழிலன், மாணவமணி பி. ஏ. (ஆனர்ஸ்) தோழர் நா. இளங்குப்பன் ஆகியோர் கடந்த இரண்டு மாதங்களாக (ஏப்ரல், மே) தாலுக்காவின் பல பாகங்களிலும் பிரச்சாரம் செய்துவிட்டு மீண்டும் ஜூன் மாதத்தில் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

1-6-50 திமிரி, 2-6-50 சோளம்பாடி (காலை) 2-5 50 வில்வாரணி (மாலை) 3 6-50 கண்ணமங்கலம் 4-6-50 சாலை [illegible]-6-50 புதுப்பாடி 11-6-50 பூங்கோடுதுறை ஊர்களில் நடக்கும் திருமண விழாப் பொதுக்கூட்டங்களிலும் திருக்குறள் சொற்பொழிவாற்றுவார்கள்.


# மதுரைமாவட்ட

# தி. மு. க. முதல் மாநாடு

## ஜூன் 10, 11 சனி ஞாயிறுகளில்

சோழவந்தான் “செல்வம் பந்தலில்” நடைபெறும்

சனி பிற்பகல் 4-மணிக்கு மாநாடு ஆரம்பம்

★

தலைவர்:- தோழர் ஈ. வெ. கி. சம்பத்

துவக்குபவர்;-தோழர் கே. கே. நீலமேகம்

பொதுச் செயலாளரும், கழகச் சொற்பொழிவாளர்களும் கலந்துகொள்கிறார்கள்

★

## பிரசார நாடகங்கள்

10—6—50 சனிக்கிழமை இரவு

மதுரை அழகரடி புதுமலர்ச்சி நாடக மன்றத்தார் நடிக்கும்

“சிலை” நாடகம்

11—6—50 ஞாயிற்றுக்கிழமை இரவு

கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்

“சந்திரமோகன்” நாடகம்

மாநாட்டுக் கட்டணம் :—

வரவேற்பாளர் ரூ. 5. பிரதிநிதி ரூ 2

பார்வையாளர் ரூ. 1

வரவேற்பாளர் சீட்டு பெற்றவர்களுக்குச் சாப்பாடு உண்டு.
மற்றவர்கள் சாப்பாட்டுக்குத் தனி டிக்கட் பெறவேண்டும்.

இரு நாட்களுக்கும் சாப்பாடு கட்டணம் ரூ. 2

10—6—50 இரவு உணவும் 11—6—50 காலை சிற்றுண்டியும் சேர்ந்தத் தனிச் சீட்டு ரூ 1

11—6—50 பகல் உணவும், இரவு உணவும் சேர்த்துத் தனிச் சீட்டு ரூ 1

நாடகங்களுக்குக் கட்டணம் இல்லை
பெண்களுக்கு மாநாட்டுக் கட்டணம் இல்லை
உணவுக் கட்டணம் மட்டும் உண்டு

மாநாட்டு அலுவலகம்:—324 அழகரடி, மதுரை.

என் முத்து. என். முத்து — செயலாளர்கள்.
தா. ஆவடையப்பன் — வரவேற்புத் தலைவர்.
எம். அய்யாசாமி, — சிண்டிகேட் உறுப்பினர்.
இ. காத்தான் — பொருளாளர்


## ஆற்காடு நாடகக்குழு

திங்களன்று 5-6-50 மாலை 6 மணிக்கு திமிரி இமயவரம்பன் அவர்கள் முன்னிலையில் ஓர் நாடகக்குழு ‘புலவர் மணிஎழிலன் இல்லத்தில்’ அமைக்கப்படும். அது சமயம் விருப்பமுள்ள தோழர்கள் கட்சிச்சார்பற்ற முறையில் கலந்துகொள்ளவேண்டுகிறேன். நாடகக்குழு மாலை 6 மணிக்கு இசைக்கருவிகளோடு துவக்கப்படும் என்பதை ஆற்காடு நாடகக்குழு அமைப்பாளர் நா. இளங்குப்பன் அறிவித்துக்கொள்கிறார்.

## ஆயுள் அதிகரிக்கும்!

லண்டன், மே 31—

ஆராய்ச்சிக்காக 10,00,000பவுன் செலவிடத் தயாராக இருந்தால், இன்னும் பத்து ஆண்டு காலத்தில் மனிதர்கள் நீடித்த காலம் வாழ வழிசெய்யப்பட முடியும் என்று டாக்டர் ராமன், எஸ். கார்டினர் என்பவர் அமெரிக்க ராசாயன சங்கத்தின் சபையில் தெரிவித்திருக்கிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.